செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 24 நாள் : 12/1/18

பத்திரிக்கைச் செய்தி

## குழந்தையின் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கு கர்ப்பிணிகள் பதிவு கட்டாயம்

பொது சுகாதாரத் துறையில் தாய், சேய் நல திட்டத்தின் கீழ், கர்ப்பிணி தாய்மார்கள் பதிவு செய்யபப்பட்டு, அவர்களுக்கு கர்ப்ப கால சேவைகள் அந்தந்த பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த சேவையை கிராமங்களில் துணை சுகாதார நிலையங்களை சார்ந்த கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் நகர்புற பகுதிகளில் நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தங்களுடைய பகுதிகளில் உள்ள கர்ப்பிணி தாய்மார்களை ஆரம்பத்திலேயே பதிவு செய்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு / தனியார் மருத்துவமனைகளுக்கு சென்று கர்ப்பிணிகள் பெற்றிடும் கர்ப்பகால பராமரிப்பு, தடுப்பூசி, ஆய்வக பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன் பரிசோதனை குறித்த விவரங்களை பெறுவதன் மூலம் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் கண்காணிக்கப்படுகிறார்கள்.

மேற்படி, கர்ப்பிணிகளின் விவரங்களை அந்தந்த கிராம சுகாதார செவிலியர்கள் பேறுசார் குழந்தைநல பதிவேட்டில் பதிவு செய்வதுடன் பிக்மி (PICME) எனப்படும் இணையதள மென்பொருளில் பதிவு செய்கிறார்கள். பிக்மி மென்பொருளில் பதிவு செய்யும்போது ஒவ்வொரு கர்ப்பிணிக்கும் 12-இலக்க பேறுசார் குழந்தைநல அடையாள எண் (RCH ID) கணினி மூலம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பேறுசார் குழந்தைநல பதிவு எண், கிராம சுகாதார செவிலியர்களிடம் மட்டும் அல்லாமல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் கர்ப்ப கால சேவையை பெறும் போது தங்கள் விவரங்களை அங்குள்ள பிக்மி மென்பொருளில் முன்பதிவு செய்தும் பெற்றுக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாது கிராம/நகர பகுதிகளில் அமைந்துள்ள பொது சேவை மையங்கள் (CSC) வாயிலாகவும், மருத்துவ உதவி எண்.102ஐ அணுகியும் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், கர்ப்பிணிகள் தானாகவே முன்வந்து http://picme.tn.gov.in/picme_public/ என்ற இணையதள முகவரியில் முன்பதிவு (Pre-Registration) செய்து தங்களது RCH ID எண்ணை சம்மந்தப்பட்ட கிராம சுகாதார செவிலியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு பதிவிற்கான இணையதள மென்பொருளில் குழந்தையின் பிறப்பு சான்றிதழை பெறுவதற்கு கர்ப்ப காலத்தில் கிராம சுகாதார செவிலியரிடம் பதிவு செய்த 12-இலக்க RCH ID எண்ணின் விவரத்தினை பிரசவிக்கும் மருத்துவமனையில் அளித்தால் மட்டுமே குழந்தையின் பிறப்பு சான்றிதழை பெற முடியும். இதன் மூலம் தமிழகத்தில் உள்ள கர்ப்பிணிகள் 100% பதிவு செய்யப்படுவதன் மூலம், கர்ப்பிணிகளுக்கு முழுமையான பராமரிப்பு வழங்கப்படுவது உறுதி செய்வதன் மூலம் மகப்பேறு மற்றும் சிசு மரணங்களை வெகுவாக குறைக்க ஏதுவாகிறது.

அதோடுமட்டுமில்லாமல், அரசு வழங்கும் நலத்திட்டமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவியை பெறுவதற்கும் மேற்படி நடைமுறைகளை பின்பற்றுவதன்மூலமே பயனடைய முடியும்.

செ.மு.தொ.அ. 12/1/18
வேலூர்– 9.

11/1/18

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்,
வேலூர்.